6 – 12 ஆம் வகுப்பு

அரசியல் அறிவியல்

பகுதி - 1

1. சமுதாயம்

1. மனிதர்கள் கூட்டமாக ஒருங்கிணைந்து வாழ்வது --- **சமுதாயம்**.
2. "மனிதன் ஒரு சமுதாய விலங்கு" என கூறியவர் --- **அரிஸ்டாட்டில்**.
3. மனிதன் ஒருவருக்கொருவர் இணைந்து செயல்படுவதால் ஏற்படும் சமுதாய உறவுகள் --- **சார்ந்து வாழ்தல்**.
4. சமுதாயத்தின் அடிப்படை --- **குடும்பம்**.
5. சமுதாயத்தின் இரண்டாவது அடிப்படை --- **பள்ளிக்கூடம்**.
6. "கிராமங்கள் இந்தியாவின் உயிர்நாடி" என கூறியவர் --- **காந்தியடிகள்**.
7. சமுதாயத்தின் ஆனிவேராக விளங்குபவர்கள் --- **ஆசிரியர்கள்**.
8. 'ஆசிரியர் தினம்' என்று கொண்டாடப்படுகிறது? --- **செப்டம்பர்** - 05.
9. அரசாங்கத்தையும், பொதுமக்களையும் இணைக்கும் பாலமாக செயல்படுபவர்கள் --- **அலுவலர்கள்**.
10. நமது சமுதாய வாழ்க்கை எத்தனை அடிப்படை கூறுகளை கொண்டது --- **இரண்டு**.

பகுதி - 2

2. மக்களாட்சி

11. சமீப காலங்களில் சிறந்த அரசாங்க முறையாக கருதப்படுவது --- **மக்களாட்சி முறை / ஜனநாயக முறை**.

12. 'மக்களாட்சி' என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர்? --- **ஹெரடோட்டஸ்**.

13. 'டெமாக்கிரஸ்சி' என்ற கிரேக்கச் சொல்லில் '**டெமொஸ்**' என்பதற்கு **மக்கள்** என்றும் '**கிரேசியா**' என்பதற்கு **அதிகாரம் (அ) ஆட்சியைக்** குறிக்கும்.

14. பழங்கால கிரேக்க, ரோமானிய அரசுகள் --- **நேரடி மக்களாட்சியை பின்பற்றினர்.**

15. "ஜனநாயகம் என்பது மக்களால், மக்களுக்காக, மக்களே ஆட்சி செய்வது" என கூறியவர்? **அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன்.**

16. "ஜனநாயகம் என்பது ஒரு அரசாங்க முறையாகும் இதில் அனைத்து மக்களும் பங்கு பெருகின்றனர்" என கூறியவர்? **பேராசிரியர் சீலே.**

17. "மக்களாட்சி என்பது பலருடைய அரசாங்கம்" --- **கிரேக்க அறிஞர் அரிஸ்டாடில்.**

18. மக்களாட்சியின் வகைகள் --- **இரண்டு**.

19. மக்களாட்சியின் இரண்டு வகைகள் --- **நேரடி மக்களாட்சி முறை, மறைமுக மக்களாட்சி முறை.**

20. மக்கள் நேரடியாக ஆட்சி முறையில் பங்கேற்பது --- **நேரடி மக்களாட்சி முறை.**

21. பண்டைய கிரேக்க, மற்றும் ரோமானிய நாகரீகங்களில் --- **நேரடி மக்களாட்சி முறை பின்பற்றப்பட்டது.**

22. பண்டைய இந்தியாவில் கிராமப் பஞ்சாயத்து --- **நேரடி மக்களாட்சி முறை பின்பற்றப்பட்டது.**

23. மக்கள், தங்கள் பிரதிநிதி மூலம் ஆட்சி முறையில் பங்கேற்பது --- **மறைமுக மக்களாட்சி முறை.**

24. மறைமுக மக்களாட்சி முறையில் மக்கள் பிரதிநிதிகள் **மக்களால்,** தேர்தல்கள் மூலம் தேர்ந்டெடுக்கப்படுகின்றனர்.

25. பெரும்பாலான நாடுகளில் பின்பற்றப்படும் மக்களாட்சி முறை? **மறைமுக மக்களாட்சி முறை.**

26. ஜனநாயக முறையிலான மக்களாட்சியில் பெரும் பங்கு வகிப்பது --- **அரசியல் கட்சிகள்.**

27. ஜனநாயக முறையின் படி, பெரும்பான்மை பெரும் கட்சி ஆட்சி அதிகாரத்தை பெருகிறது, அரசாங்கத்தை நடத்துகிறது அது --- **ஆளுங்கட்சியாகும்.**

28. ஆளுங்கட்சியின் தவறுகளை சுட்டிக் காட்டி ஆட்சி தவறான பாதைகளில் செல்லாமல் தடுப்பது --- **எதிர்க்கட்சி**.

29. கட்சிமுறையின் வகைகள் --- **மூன்று வகைப்படும்.**

30. கட்சிமுறையின் வகைகள் --- **ஒரு கட்சி ஆட்சி முறை, இரு கட்சி ஆட்சி முறை, பல கட்சி ஆட்சி முறை.**

31. ஒருக்கட்சி ஆட்சி முறை உள்ள நாடுகள்? **க்யூபா, சீனா.**

32. இருக்கட்சி ஆட்சி முறை உள்ள நாடுகள்? **அமெரிக்கா, இங்கிலாந்து.**

33. பலக்கட்சி ஆட்சி முறை உள்ள நாடுகள்? **இந்தியா, பிரான்ஸ்.**

34. நாடாளுமன்ற தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் **நான்கு** அல்ல **அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6% வாக்கினைப்** பெரும் கட்சி --- **தேசியக் கட்சி எனும் அங்கீகாரத்தை இந்திய தேர்தல் ஆணையத்தால் பெரும்.**

35. மாநில சட்டமன்ற தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் **6% வாக்கினைப்** பெற்று குறைந்தபட்சம் **2 இடங்களில்** வெற்றி பெரும் கட்சி --- **மாநில கட்சிகள் (அ) பிராந்திய கட்சிகள் எனும் அங்கீகாரத்தை இந்திய தேர்தல் ஆணையத்தால் பெரும்.**

36. இந்தியாவில் வாக்களிக்கும் உரிமை --- **18 வயது நிறம்பியிருத்தல் (வயது வந்தோர் வாக்குரிமை).**

37. இந்தியாவில் தேர்தலில் போட்டியிடும் வயது --- **25 வயது நிறம்பியிருத்தல்.**

38. தேர்தல் முறை --- **4 வகைப்படும்.**

39. நேரடித் தேர்தல், மறைமுகத் தேர்தல், இடைத்தேர்தல், இடைபருவத் தேர்தல் --- **இந்திய தேர்தல்முறை வகைகள்.**

40. மக்கள் தேர்தல்கள் மூலம் மக்கள் பிரதிநிகளை நேரடியாக தேர்ந்தெடுப்பது --- **நேரடி தேர்தல் முறை (எ.கா. மாநில சட்டமன்ற, நாடாளுமன்ற மக்களவை தேர்தல்கள்).**

41. மக்கள் தங்களது மக்கள் பிரதிநிதி மூலம் மற்றொரு மக்கள் பிரநிதியை தேர்ந்தெடுப்பது --- **மறைமுக தேர்தல் முறை (எ.கா. நாடாளுமன்ற மாநிலங்களவை, ஜனாதிபதி தேர்தல்கள்).**

Winmeen